# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

# கொழும்பு

ஊடக அறிக்கை

****************************

## இந்தியரான சியாமளா கோலியின் நீச்சல் சாதனைப் பயணம்

இந்தியாவின் தலைசிறந்த நீச்சல் வீராங்கனையான சியாமளா கோலி அவர்கள் 30 கிலோமீற்றர் அகலமுடைய பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் சாதனை முயற்சியை வட மாகாணசபையின் அவைத்தலைவர் கௌரவ சி.வி.கே.சிவஞானம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார் . மக்கள் மட்டத்தில் இந்திய இலங்கை உறவுகளையும் பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையான நெருக்கமானதும் நட்பு ரீதியிலானதுமான உறவினையும் இப்பெருமுயற்சி குறித்து நிற்கின்றது.

2021 மார்ச் 19 ஆம் திகதி இலங்கையின் மன்னாரிலிருந்து பாக்கு நீரிணையை நீந்தி கடந்து இந்தியாவின் தனுஷ்கோடியை 47 வயதுடைய இந்த நீச்சல் வீராங்கனை சென்றடைந்து சாதனை படைக்கும் நிலையில் இச்சவால்மிக்க பயணத்தை உலகளவில் வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கும் இரண்டாவது பெண்மணியாகவும் 13 வது நீச்சல் வீரராகவும் அவர் திகழ்வார்.

தென்கொரியாவின் குவாஞ்சுவில் நடைபெற்ற 2020 FINA உலகளாவிய வீரர்களுக்கான சுற்றுப்போட்டியில் தெலுங்கானாவை பிரதிநிதித்துவப்படுத்தி சியாமளா கோலி அவர்கள் பங்குபெற்றியிருந்தார் . 2020 நவம்பரில் பட்னாவில் உள்ள 30 கிலோ மீட்டர் அகலமுடைய கங்கை ஆற்றை 110 நிமிடங்களில் நீந்தி கடந்து ஆறாம் இடத்தை பெற்றுக்கொண்டார்.

பன்முக ஆளுமையினைக் கொண்டிருக்கும் சியாமளா அவர்கள் அனிமேஷன் பட தயாரிப்பாளர், இயக்குனர், எழுத்தாளர் என்ற பல்வேறு ஆளுமைகளை கொண்டிருக்கும் அதேவேளை நான்கு வருடங்களுக்கு முன்னரான காலப்பகுதி முதல் நீச்சலில் முன்னிலை வகித்து வருகிறார். ஹைதராபாத் கசிபௌலி நீச்சல் தடாகத்தில் அவரது பயிற்றுவிப்பாளரான திரு ஆயுஸ்

யாதவ் அவர்களின் வழிகாட்டலுடன் பாக்கு நீரிணையை கடப்பதற்கான நீச்சல் சவாலுக்குரிய பயிற்சிகளை அவர் பெற்றிருந்தார். பாக்கு நீரிணையை

நீந்தி கடக்கும் சாதனையானது சகல பெண்களுக்குமான ஒரு பாரிய சாதனையாக பதியப்படும் என நம்பும் சியாமளா கோலி அவர்கள் முடியாதது எதுவும் இல்லை என்பதனையும் பெண்கள் உயர்ந்த இலக்குகளை நோக்கி பயணிப்பதற்கும் இவ்வாறான விடயங்கள் ஆதரவாக அமையும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

***************

கொழும்பு

18 மார்ச் 2021